DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. No. 254/2022 |
| Deposition of witness | : | PW- 7 |
| Name | : | அபிராமி |
| Father's /Husband Name | : | ராதாகிருஷ்ணன் |
| Village | : | தஞ்சாவூர் |
| Taluk | : | தஞ்சாவூர் |
| Age | : | 27 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17th day April, 2025.
Accused absent petition u/s 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2021–ம் தேதி மாலை 6.25 மணிக்கு நான் நன்னிலம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது அங்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட லெட்சுமணன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை கந்தன் என்ற நபர் கட்டையால் அன்றைய தினம் மதியம் 02.00 மணியளவில் அவரது வீட்டில் எதிரே வைத்து தலையில் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு உச்சந்தலையின் முன் பகுதியில் 6 X 0.5 செ.மீ அளவிலான ஆழமான வெட்டு காயம் காணப்பட்டது. அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து தலையில் ஐந்து தையல்கள் போட்டு தேவையான மருந்து வழங்கி சிகிச்சையளித்து அனுப்பினேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். மேற்படி நபருக்கு நான் பதிவு செய்த காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :–

மேற்படி காயமானது கூர்மையான பொருள் மீது தலையால் மோதிக்கொள்ளும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் நான் சிகிச்சை அளித்த போது சுயநினைவுடன் இருந்தார் என்றாலும், அவர் தனியாகத்தான் சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான்.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.